**பாடம் – 7**

# உண்மையான ஆராதனை
# TRUE WORSHIP

கிறிஸ்தவனுக்கு தேவனோடு சிறந்த உறவு இருக்கிறது. திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவின் சபையோடு சேர்க்கப்படுகின்ற நாம் ஒவ்வொரு வரும் சபையாகிய குடும்பத்தின் அங்கமாகின் றோம்.

சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகின்ற ஒவ்வொரு நபரும், கிறிஸ்து எந்த ஆவிக்குரிய குடும்பத்திற் காக மரித்தாரோ, அந்த குடும்பத்தில் அங்கமா கின்றனர். நாம் தனியாக இருக்கும்பொழுது தேவனை நாம் ஆராதித்துக் கொள்ள முடியும். நாம் குடும்பமாக நம் இல்லத்தில் தேவனை நாம் ஆராதனை செய்யலாம். நாம் வாரத்தின் எந்த நாளிலும், நாளின் எந்த மணி நேரத்திலும் தேவனைத் துதித்துப் பாடல்களையும், ஜெபத்தை யும் ஏறெடுக்கலாம். ஒரு ஆசாரியன் மூலமாகவோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நபரின் மூலமாகவோ தேவனை ஆராதிக்க வேண்டிய தில்லை. தேவனை எந்த இடத்திலும், எந்த மணி நேரத்திலும் ஆராதிக்கலாம்.

ஆனால், திருச்சபையாய் தேவனை ஆராதிக் கும்படியாக வாரத்தின் முதல்நாளை அவர் குறித்திருக்கின்றார். தங்கள் பாவங்கள் மன் னிக்கப் படும்படியாக மூவாயிரம் ஆத்துமாக்கள் வாரத்தின் முதல்நாளிலே திருமுழுக்கு பெற்று (ஆதி. 2:38-41) திருச்சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (அப். 2:47)

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அந்த நாளில் இருந்து இன்றுவரை கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடி, தேவனை ஆராதித்து வருகின்றனர். நம் பாவத்தை மன்னிக்கும்படியாக சிலுவையில் மரித்த கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூறி, தேவனுடைய வார்த்தையை படித்து, ஜெபித்து, நம் பணத்தின் அல்லது பொருளின் ஒரு பகுதியை தேவனுக்கு திருப்பிக் கொடுத்து, துதித்து, தேவனை ஆராதித்து வருகின்றனர். உண்மை யான ஆராதனையின் குணாதிசயங்களை படித்த பின்பு இவைகளை குறித்து தியானிக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை கவனமாக பார்க்கவும்.

**உண்மையான ஆராதனையின் குணா திசயம் :**

“ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றி விட்டு, கர்த்தரைச் சேவியுங்கள்” (யோசு. 24:4)

“நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக் கடவீர்கள். அவர் உங்களி டத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்” (1சாமு. 12:24)

“உண்மையாய்த் தொழுது கொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும்; அது இப் பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாய் இருக்கும் படி பிதாவானவர் விரும்புகிறார்... தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள் கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்” (யோ.4:23-24)

“வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்” (கொலோ. 3:17)

முதல் மூன்று வசனங்களும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகிறது. மூன்று வசனங் களிலும் “உண்மை” என்ற வார்த்தை உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. ஆராதனை சரியான தாய் இருக்க வேண்டுமானால், அது உண்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

நான்காவது வசனத்தில் இந்த குறிப்பையும் பார்க்க இயலும். நாம் கிரியையினால் எதைச் செய்தாலும் (போதனை) இயேசுவின் நாமத்தில் இருக்க வேண்டும். (அதாவது இயேசுவின் அதிகாரத்தில்).

அவருக்கு ஏறெடுக்கப்படும் ஆராதனையை தேவன் அங்கீகரிக்கவில்லையெனில், அது உண்மையான ஆராதனையாக இருக்க முடியாது. உண்மையான ஆராதனை என்பது, ‘உங்கள் முழு இருதயத்தோடும்’ அல்லது ‘ஆவி யோடும்’ இருக்க வேண்டும். அன்பில்லாத ஆராதனை என்பது சர்வவல்லமையுள்ள தேவனுக்கு ஏறெடுக்கப்பட முடியாது. பழைய காலத்தில் அவருக்கு ஆராதனையை ஏறெடுத்து, ஆனாலும், “இதோ! எவ்வளவு வருத்தம்” என்று சொல்லியதினால் அவர் (தேவன்) அவமானப் படுத்தப்பட்டார். (மல்கியா 1:13)

**கர்த்தருடைய பந்தி:**

முதல் நூற்றாண்டிலே (கி.பி.33) திருச்சபை யானது ஸ்தாபிக்கப்பட்டபோது, சீஷர்கள் (கிறிஸ்தவர்கள்) அப்பம் பிட்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூடினார்கள். (அப். 20:7 ; 2:42) இவ்வசனம் கர்த்தரின் பந்தியைக் குறிக்கிறது. மேலும் இது, இயேசு சிலுவையில் நமக்காக மரித்ததின் நினைவாக இருக்கிறது.

பவுல், கொரிந்தியருக்கு அதின் நோக்கத்தை நினைவு படுத்துகிறார். “நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, நீங்கள் வாங்கி புசியுங்கள். இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமா யிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப் படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப்பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையா யிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

ஆகையால், நீங்கள் அந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தையும் தெரிவிக்கிறீர்கள்” (1கொரி.11:23-26)

இந்த நினைவுகூருதலில் உபயோகிக்கப்படும் புளிப்பில்லாத அப்பமானது, நம்முடைய பாவங் களுக்காக சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரின் சரீரத்தைக் குறிக்கின்றது. திராட்சரசமானது நமக்காக சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தைக் குறிக்கின்றது. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் (அப். 20:7 ; 1கொரி. 11:23-33) அவருடைய மேஜையைச் சுற்றிலும், இயேசுவின் பலியை நினைவுகூரும்படியாக நாம் ஒன்றாக கூடுகிறோம்.

**கொடுத்தல் :**

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வின் கிருபையை அறிந்திருக்கிறீர்கள்; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவரு டைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும் படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே” (2கொரி. 8:9)

தேவன் “உற்சாகமாய் கொடுக்கிறவர்களை” நேசிக்கிறார் (2 கொரி. 9:7) மேலும் கிறிஸ்தவர் களாகிய நமக்கு உள்ள ஒரு பெரிய சிலாக்கியம் என்னவென்றால், தேவன் நம்மை ஆசீர்வதித்த திலிருந்து, அவருக்கென்று கொடுப்பதே ஆகும். ஒவ்வொருவருடைய வரவுக்குந்தக்கதாக, வாரத்தின் முதல்நாளிலே தேவனுக்கு கொடுக்கும் படியாக பவுல் சகோதரர்களுக்கு கட்டளையிட்டார். (1கொரி. 16:1,2)

**அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைநிற்றல் :**

பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் திருமுழுக்கு பெற்றவுடன், அவர்களெல்லாருக்கும் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என தெரியும். ஆனால் அவர்கள் புதிய ராஜ்யத்தின் உபதேசங்களை தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என அறிந்திருந்தனர். ஆகையால் அப்போஸ்தலர்கள், தங்களுக்கு பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட காரியங் களை அவர்களுக்குப் போதித்தனர். (அப். 2:42) அவர்கள் ஏவப்பட்டதினால் எவைகளைப் பேசினார் களோ, எழுதினார்களோ, அவையனைத்தும் சத்தியமான (உண்மையான) தேவ வார்த்தைகள் (1தெச. 2:13) பெரோயா பட்டணத் தாரை போல நாமும் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய வேண்டும். (அப். 17:11) ஏனென்றால் நாம் சத்தியத்தைத் தான் கற்றுக் கொள்கிறோம் என்ற உறுதி நமக்கு வேண்டும். மேலும் ஆவிக்குரிய வளர்ச்சியை நாம் பெறும் படியும் நாம் தேவனுடைய வார்த்தையை படிக்க வேண்டும். (1பேதுரு 2:2)

**ஜெபம் :**

நாம் “இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும்” என்று பவுல் கூறுகிறார் (1தெச.5:17) ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவின் மூலமாக தினந்தோறும், அநேகமுறை தேவனுடன் தொடர்பு கொள்ள வேண்டும். (வாரத்தின் முதல்நாள் திருச்சபை கூடும்போதும் கூட); தேவன் நம் நினைவிலும், இருதயத்திலும் எப்போதும் இருக்க வேண்டும். அவருடைய வல்லமைக்காகவும், கிருபையான இரட்சிப்பிற்காகவும், அவருடைய வசனத்தின் மூலம் அவர் நம்மை எவ்வளவு தூரம் நேசிக்கிறார் என்பதை அறிந்து நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். நாம் தேவனிடத்தில் விண்ணப்பங்களையும் வைக்கலாம். ஆனால் அது நம்முடைய தன்னலத்திற்காக மாத்திரம் இருக்கக்கூடாது. (யாக். 4:3)

“நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லா வற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங் களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். (பிலி. 4:6-7)

**பாடுதல் :**

கிறிஸ்தவர்களுக்கு ஒருவரோடொருவர் பேசும் கடமையும் உண்டு. “சங்கீதங்களினாலும், கீர்த்த னைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி” (கொலோ. 3:16)

நாம் தேவனிடம், ஒருவருக்கொருவரிடம் பாட வேண்டும் என்று மாத்திரமே, புதிய ஏற்பாடு நமக்கு அங்கீகாரம் கொடுக்கின்றது. மாறாக, அந்தப் பாடலுடன் இசைக்கருவிகளை பயன் படுத்தும்படி அது எங்குமே கூறியதில்லை. நினைவில் கொள்வோம்! நாம் இயேசு அங்கீகரித்ததை மாத்திரமே செய்ய வேண்டும். (கொலோ. 3:17)



இயேசுவோ அவருடைய சீஷர்களோ ஆவிக்குரிய பாடல்களை இசைக்கருவிகளுடன் பாடினார்கள் என்பதற்கு ஒரு ஆதாரம் இல்லை.

**யெரொபெயாமின் பாவம் :**

யெரொபெயாம் என்னும் ஒரு மனுஷன், தேவன் தன்னை ஆராதிக்க சொல்லியிருந்த முறைமையே மாற்றினான் (1 இராஜ. 12:25-33) இந்த முடிவு அவனையும் அவன் ஜனங்களையும் 'பெரிய பாவம்' செய்ய வைத்தது (2 இராஜா.17:21) இவனுடைய உதாரணத்திலிருந்து தேவன் தன்னை ஆராதிப்பதற்காக கட்டளையிட்டவற் றுடன் சேர்க்க ஒருவனுக்கும் உரிமை இல்லை என்று நாம் பார்க்கிறோம். மேலும் அதிலிருந்து எதையும் எடுத்துப்போடவும் யாருக்கும் அதிகாரம் இல்லை. தேவன் நமக்கு தன்னை ஆராதிக்க கட்டளையிட்டபடி மாத்திரம் செய்ய வேண்டும்.

**தேவன் விக்கிரக ஆராதனையை வெறுக்கிறார் :**

"சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக் கும், அநியாயத்துக்கும், விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தேவனைக் குறித்து அறியப்படுவது அவர் களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

எப்படியெனில் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள். உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளி னாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை.

அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத் தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி,

அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்தி லுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்கள் அவமானப்படுத்தத் தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார்.

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித் தார்கள். அவரே என்றென்றைக்கும் ஸ்தோத் தரிக்கப்பட்டவர். ஆமென்." (ரோமர் 1:18-25)